செய்தி வெளியீடு எண்: 025 நாள் : 14. 01. 2015

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு தமிழ் நாடு முழுவதும் 18.1.2015 அன்று 43,000 போலீயோ சொட்டு மருந்து முகாம்கள் ஓரே நாளில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள், 3000 வாகனங்கள் ஏற்பாடு 5 வயதிற்குட்பட்ட 70 லட்சம் குழந்தைகளுக்கு போலீயோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு

### மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் தகவல்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் 18.1.2015 அன்று தமிழ்நாடு முழுவதும் ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலீயோ சொட்டு மருந்து வழங்குவது தொடர்பாக ஆலோசானைக் கூட்டம் சென்னை டிஎம்எஸ் அலுவலக வளாகத்தில் 14.1.2015 இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன் இஆப., தேசிய ஊரக நல சுகாதார திட்ட இயக்குநர் டாக்டர்.சி.என்.மகேஷ்வரன் இஆப., தமிழ் நாடு சுகாதார திட்ட இயக்குநர் திரு.எம்.எஸ்.சண்முகம் இஆப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர்.கீதாலட்சுமி, மருத்துவப் பணிகள் இயக்குநர் டாக்டர்.சந்திரநாதன், இணை இயக்குநர் தடுப்பூசி டாக்டர்.சி.சேகர், இணை இயக்குநர் (ஆசுநி) டாக்டர்.தாமரைச்செல்வி, உலக சுகாதார திட்ட கண்காணிப்பு மருத்துவர் டாக்டர்.சுரேந்திரன் மற்றும் மருத்துவத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது

மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் 18–1–2015 அன்று நாடு முழுவதும் நடைபெற உள்ளது. தமிழ் நாட்டில் 43,051 சொட்டு மருந்து மையங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள்/அரசு மருத்துவமனைகள்/அங்கன்வாடி மையங்கள்/சத்துணவு மையங்கள்/பள்ளிகள் மற்றும் முக்கியமான இடங்களில் பிரத்தியேகமாக நிறுவப்பட்டு சொட்டு மருந்து வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**முக்கிய அம்சங்கள்**

1. சொட்டு மருந்து வழங்கும் மையம் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும்.
2. அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் முதல் தவணை 18–1–2015 (ஞாயிற்றுக்கிழமை) அன்றும் இரண்டாம் தவணை 22–2–2015 (ஞாயிற்றுக்கிழமை) அன்றும் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.
3. தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஓரிரு நாட்களுக்கு முன் சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் சொட்டு மருந்து கொடுக்க வேண்டும்.

4. புதிதாக பிறந்த குழந்தைகளுக்கும் (New borns) முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
5. சொட்டு மருந்து வழங்கப்படும் குழந்தைகளுக்கு விரலில் மை வைக்கப்படுகிறது. இது விடுபடும் குழந்தைகளைக் கண்டறிய உதவுகிறது.
6. முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்க தனியார் மருத்துவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.
7. இடம் பெயர்ந்து வாழும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும்.

**பயணம் மேற்கொள்ளும் மற்றும் தொலைதூர பகுதி வாழ் குழந்தைகளுக்கு சிறப்பு ஏற்பாடு:**

தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நாளில் பயணிக்கும் குழந்தைகளின் வசதிக்காக முக்கிய பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்களில் 1652 நகரும் மையங்கள் (Transit booth) நிறுவப்பட்டு சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1000 நடமாடும் குழுக்கள் மூலமாக தொலை தூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

**சொட்டு மருந்து முகாமில் ஈடுபடும் பணியாளர்கள்**

18–01–2015 அன்று போலியோ சொட்டு மருந்து முகாமில் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள். ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுகிறார்கள்.

**போலியோ இல்லாத 11– வது ஆண்டில் தமிழ் நாடு அடியெடுத்து வைக்கிறது.**

மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு தமிழ் நாடு போலியோ இல்லாத நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், குழந்தைகளை போலியோ வைரஸ் பாதிப்பிலிருந்து பாதுகாப்பது மிகவும் இன்றியமையாததாகும். அனைத்து தாய்மார்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“ இந்த பூமியிலிருந்து போலியோ நோயை முற்றிலும் ஒழிக்க அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம்”**

மேற்கண்ட தகவலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**